**இலங்கையின் அறுபத்தொன்பதாம் ஆண்டு சுதந்திரதின வைபவத்தில் மாண்புமிகு மங்கள சமரவீர, பா.உ., அவர்களினால் விடுக்கப்பட்ட உரை**

இலங்கையின் அறுபத்தொன்பதாம் ஆண்டு சுதந்திர தின வைபவத்தில் சகல இலங்கையர்களுக்கும் மற்றும் வெவ்வேறு திறன்களில் உலகம் முழுவதும் வாழ்ந்து பணிபுரியும் இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1948 பெப்புருவரி 04 ஆந் திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் எமது நாட்டின் பயணம் நாம் பெருமையடையக்கூடிய சாதனைகள் மற்றும் துயரம், அங்கலாய்ப்பு ஆகியவற்றுடனான கலப்புடைய சாதனைகளாகவுள்ளது.

தேசிய ஐக்கிய அரசாங்கமொன்றை சனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர்களின் தலைமைத்துவத்தின் கீழ் உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட திட்டவட்டமான நடவடிக்கையின் கீழ் பலமான சனநாயக நாடொன்றாக எமது நாட்டு மக்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் தேசிய கொள்கைகளை வகுக்கும் பாதையில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். இந்த நடவடிக்கையில் நல்லாட்சி அரசாங்கம், சட்ட ஆட்சி, தனிப்பட்டவர்களின் உரிமைகள், நீதி, சுதந்திரம், தன்னாதிக்கம் ஆகியவை நிலைநிறுத்திக் கடைப்பிடிக்கப்படுகின்றன. அத்துடன் பல்லின கலாசார மற்றும் பல்மதத் தன்மை எமது நாட்டில் பாராட்டிக் கடைப்பிடிக்கப்படுகின்றதுடன் அவற்றின் விழாக்களும் நடாத்தப்படுகின்றன. இங்கு பாரபட்சம் தொடர்பிலான சகல வேறுபாடுகளும் கைவிடப்படுகின்றன. நாம் சமத்துவமான பொருளாதார அபிவிருத்தியுடனான பலமான நாடொன்றைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றோம். இது தன்னளவில் சமாதானத்தைக் கொண்டுவருவதுடன் உலகத்துடனும் சர்வதேச சமூகத்துடனும் அனைவரின் நன்மைகளுக்காகவும் சேர்ந்து பணியாற்றுவதாகவும் இருக்கும்.

இந்தப் பாதையை நாம் எமக்கு ஒரு சவால் நிறைந்த ஒன்றாகத் தெரிவு செய்துகொண்டுள்ளோம். நாட்டைக் கட்டியெழுப்பும் சிறப்புப் பணியானது இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள இலங்கையர்கள் அனைவர்களினதும் அர்ப்பணிப்பையும் பொறுப்பையும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேவைப்படுத்துகின்றது.

நாம் எமது விடயத்தில் தெரிவு செய்த பாதை சவால் நிறைந்த ஒன்றாகவுள்ளது. தேசத்தைக் கட்டியெழுப்பும் சிறப்புப் பணியானது இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள சகல இலங்கையர்களினதும் அர்ப்பணிப்பையும் பொறுப்பேற்பையும் வேண்டுகின்ற ஒன்றாகவுள்ளது.

எமது சுதந்திரத்தின் 70வது ஆண்டை நாம் அணுகுகின்ற வேளையில் நீங்கள் அனைவரும் எமது தேசத்தின் வரலாற்று ரீதியான இந்த முக்கியமான வாய்ப்பை உங்களுடைய பலங்களையும், நல்லெண்ணங்களையும், சக்தியையும், தேர்ச்சியையும், அறிவையும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வளமுள்ள ஒன்றானதாக்குவதற்கும் சமாதானம் அங்கு நிலவக்கூடிய நிலையை ஏற்படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமென நான் வலியுறுத்திக் கூறுகின்றேன். அவ்வண்ணம் செய்யுமிடத்து நாம் பெருமைமிக்க பிரஜைகளாக வேண்டுமென்ற எமது கனவுகளை இலங்கையில் கட்டியெழுப்புவதற்கும் மோதல் மீளாவும் நிகழாமல் உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்த வேண்டுமெனவும் நான் வலியுறுத்துகின்றேன்.

மங்கள சமரவீர, பா.உ.,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்